# கிறிஸ்தவ கொள்கைத்திரட்டு அறிமுகம்



ஆசிரியர் கல்விப் பாடநெறி

121801

| | |
|---|---|
| எழுத்தாளர் | வண. அலெக்ஸ். தசநாயக்க அடிகள் |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | வண. சைமன். பெர்ணண்டோ சகோதரர் ஒஸ்டின். டயஸ் |
| | பயஸ். பெர்ணண்டோ |
| | எம். ஜே. ஏ. பெரேரா |
| | டபிள்யூ. பீ. எம். லோவி |
| | செல்வி. ஆர். அன்ரனி |
| | கே. ஏ. சி. டி. குணதிலக |
| | பெ. கணநாதபிள்ளை |
| படங்கள் | டி. எல். பெரேரா |
| தளக்கோலம் | ஏ. சிவராஜா<br>மகிந்த ராஜபக்ஸ |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ |
| | ஆர். பி. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி எஸ். டி. லயனல். அமரகுணசேகர |

# கிறிஸ்தவ கொள்கைத்திரட்டு
# அறிமுகம்

தொலைக் கல்வி நிறுவகம்
தேசியக் கல்வி நிறுவகம்

பொருளடக்கம் பக்கம்:

0.0 அறிமுகம் ........................ 3
1.0 குறிக்கோள்கள் ........................ 4
2.0 முற்சோதனை ........................ 4

பகுதி 1

3.0 கிறிஸ்தவ மறைப் போதகம் ........................ 6

பகுதி 11

4.0 கிறிஸ்தவ போதகத்தின் பிரதான படிப்பினைகள் .... 9

பகுதி 111

5.0 எம் மீட்பின் வழி ........................ 13

பகுதி 1

6.0 கிறிஸ்தவம் தொடர்ந்து வாழ்கிறது ........................ 18
7.0 பொழிப்பு ........................ 20
8.0 பிற்சோதனை ........................ 20
9.0 ஒப்படை ........................ 22
10.0 முக்கிய வாசகங்கள் ........................ 22
11,0 மேலதிக வாசிப்பு ........................ 24
12.0 விடைகள் ........................ 24
13.0 அரும்பத விளக்கம் ........................ 26

(C) 1988 தேசியக் கல்வி நிறுவகம்
பதிப்பு 1.1

# 0.0 அறிமுகம்

கிறிஸ்தவ ஆசிரியராக இருப்பதற்கு நீர் பெற்றுள்ள அழைத்தல் ஒரு விசேட அழைத்தலாகும். கிறீஸ்தவ கல்வியறிவைக் கொடுக்க நீர் முன் வந்ததற்காக நாங்கள் உம்மை மெச்சுகிறோம். உம்முடைய சேவையைப் பாராட்டுகிறோம். பிள்ளைகளிடம் நாங்கள் எதிர்பார்ப்பது அறிவை மாத்திரமன்று, ஒரு உண்மைக் கிறீஸ்தவனுக்கு இருக்கவேண்டிய திறமைகள் மனப்பாங்கு, பெறுமானங்கள் ஆகியவற்றை அவர்கள் அறிய செய்து அவர்களின் விசுவாச வாழ்க்கையை உயர்த்த வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்

இப்பாடத் தொகுப்பு மூலம் நாங்கள் செய்ய முயல்வது கிறீஸ்தவ விசுவாசத்தையொட்டிய ஆழமான அறிவை கிறிஸ்தவ ஆசிரியனுக்கு ஊட்டி, அவன் தன் வாழ்க்கையில் அவ் விசுவாசத்தை வாழ்ந்து காட்டி, மாணவ மாணவிகளின் வாழ்க்கை வளரும் படியாக அதற்கேற்ற அறிவுரையைக் கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்குவதாகும். மேலும் மீட்பராகிய கிறீஸ்துவை அவர்கள் நன்கறிந்து, திருவருட்சாதன வாழ்வை, பொது வழிபாட்டு சீவியத்தின் மூலம் கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்ட வாழ்க்கை என்பதை அறிமுகப்படுத்துவது மட்டுமன்றி ஆசிரியனுடைய மனப்பான்மையையும் திறமையையும் வளர்த்தலுமாகும்.

தற்காலக் கிறீஸ்தவர்கள், உலக வாழ்விலும் தொழில் வளர்ச்சியிலும் சிக்குண்டு, தங்கள் கிறீஸ்தவ அழைத்தலையே மறந்து விடுகிறார்கள். ஒரு சில கிறீஸ்தவர்கள் உலக மாயையில் உலக சூறுவெளியில் அகப்பட்டுக் கொண்டார்கள். அதனால் அவர்களின் கிறீஸ்தவ வாழ்வின் ஒழுக்கசீலங்கள் படிப்படியாக சீர்குலைந்துள்ளன. இன்று நம் நாட்டிலும், உலகிலும் ஏற்படும் தீயசெயல்கள், யுத்தம், அழிவுச் செயல்களுக்கு இவர்களும் பங்காளியாகின்றனர். கிறீஸ்தவத்தை முறையாகக் கற்று ஒழுகுவதனல் ஒருவன் இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளியாகத் திகழ முடியும். அவன் சமாதானத்தின் கருவியாக இருக்கவேண்டும். கத்தோலிக்க மறை ஆசிரியர் என்ற முறையில் உமது தனித்தன்மையான வாழ்க்கைப் பங்கு இதுவாக இருக்கவேண்டும். ஆகவே இந்த முதல் பாடத்தொகுப்பை நாங்கள் உமக்கு முன் வைக்கிறோம். இந்த பாடத்தொகுப்பைப் படிப்பதாலும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாலும் உமது கருத்துக்களிலும் மனப்பான்மையிலும் ஒரு மாற்றம் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. இதுதான் இந்தப் பாடத்தொகுப்பின் குறிக்கோள்.

## 1.0 குறிக்கோள்கள்

- ✶ கிறீஸ்தவ கொள்கைகளின் தொடக்கம் சம்பந்தமான அறிவைப் பெறுதல்.
- ✶ வாழ்வும் வழியுமாகிய கிறீஸ்துவை நன்கறிதல்.
- ✶ கிறீஸ்தவ தர்மத்தின் அடிப்படைப் போதனைகளை விளங்கிக்கொள்ளல், அதன் கருத்துக்களைச் சரியாக விளங்கிக்கொள்ளல்.
- ✶ சமூக வழிபாட்டின் மூலம் இறைவனுடன் தொடர்பை அமைத்துக்கொள்ளும் வழியை அறியத் தருதல்.
- ✶ ஒற்றுமை, சமாதானம், சகோதரத்துவத்துடன் யாவருடனும் வாழும் வழியை அறிந்துகொள்ள வழிவகுத்தல்.
- ✶ கிறீஸ்தவ ஆசிரியராக நீர் பெற்றுக்கொண்ட அழைப்பை மாணவ மாணவிகளின் சீவியத்தில் (வாழ்வை) பிணைக்க முன்வருதல்.

இந்த மாதிரிப்பாடத்தைச் செயற்படுத்து முன் கிறீஸ்தவ கொள்கைகளைப்பற்றிய உமது அறிவை ஆராய்ந்து பார்க்குமுகமாக கீழ்க்காணும் பயிற்சியில் ஈடுபடுக.

## 2.0 முற்சோதனை

கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவிலும் நான்கு விடைகள் உள்ளன. அவைகளுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

1. முழு உலகமும் பரிபாலிக்கப்படுவது

   (1) சக்தியினால் (ii) நவக்கோள்களின் சக்தியினால்
   (iii) முன் நடைபெற்ற ஒன்றின் பிரதிபலனால்
   (iv) இறைவன் ஆண்டு நடாத்துதலால்

2. இறைவன் அளித்த முதலாம் கற்பனை கற்பிப்பது

   (1) சுரூப வணக்கத்தைத் தவிர்ப்பது
   (ii) ஒரே கடவுளை வணங்குதல்
   (iii) ஞாயிறு தினம் பூசைக்குச் சமூகமளிப்பது
   (iv) அயலானை நேசிப்பது

3. நற்செய்தி ஆசிரியர்களான அப்போஸ்தலர்கள்

(i) புனித மார்க்கும், அருளப்பரும்
(ii) புனித அருளப்பரும், லூக்காவும்
(iii) புனித மத்தேயுவும், அருளப்பரும்
(iv) புனித லூக்காவும், மத்தேயுவும்

4. கிறீஸ்து இறைவனை அழைத்த முறை

(i) ஆண்டவரே (ii) பிதாவே
(iv) படைத்தவரே (iv) எல்லாம் வல்ல இறைவா

5. 2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபையை அழைத்த விதம்

(i) கிறிஸ்துவின் மந்தை
(ii) பரிசுத்தரின் ஐக்கிய சபை
(iii) இறைமக்கள்
(iv) கிறிஸ்துவின் மறையுடல்

6. கிறிஸ்துவின் போதனை எமக்குக் கிடைத்திருப்பது

(i) பழைய, புதிய ஏற்பாடுகளின் வழியாக
(ii) திருச்சபைப் பிதாக்களின் நூல்கள் வழியாக
(iii) இறைவழிபாட்டின் மூலம்
(iv) திருச்சபையின் பாரம்பரியத்தின் மூலமும், பரிசுத்த நற்செய்தி வழியாகவும்

7. இறைவனின் அன்பை நிதமும் சுட்டிக்காட்டும் நற்செய்தியாளன்

(i) புனித இராயப்பர்
(ii) புனித சின்னப்பர்
(iii) புனித அருளப்பர்
(iv) புனித லூக்கா

8. மேன்மையான பொது வழிபாடு

(i) திரு மணித்தியாலம்
(ii) சிலுவைப்பாதை
(iii) திருப்பலி
(iv) செபமாலை

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

இப்பாடத்தின் முதற்பகுதியில் கிறிஸ்தவ போதகம் என்னவென்பதைத் தெளிவாகத் தர முயலுகிறோம்.





## 3.0 கிறிஸ்தவ மறைப் போதகம்

கிறிஸ்தவ போதகம் தர்க்கங்களின் பிரதிபலனுலோ, பரீட்சிக்கப்பட்டு தெரியப்பட்டதாலோ, தத்துவத்தாலோ வந்ததொன்றன்று. அது இறைவனுல் மனிதனுக்கு நேரடியாய் வெளிப்படுத்தப்பட்ட செய்தியாகும். இது பழமை வாய்ந்தது. இதைப் புனித சின்னப்பர் எபிரேயருக்கு எழுதிய திருமடலில் இவ்வாறு கூறுகிறுர்.

பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோருடன் பேசிய இறைவன், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகப் பேசியுள்ளார் (எபி/1) இறைவனின் வாக்கு கிறிஸ்துவில் மனுவுருவானது எனச் சின்னப்பர் காண்பிக்கின்றுர். இதனுற்றுன் புனித அருளப்பர் (யோவான்) கிறிஸ்துவை ''வார்த்தையானவர்'' என்று எடுத்துக்கூறுகிறுர். ''வார்த்தை மனுவுருவானுர் நம்மிடையே குடிகொண்டார்'' (அரு 1/4) கிறிஸ்தவ போதகம் (வார்க்தை) கிறிஸ்து என்பதனை இதனுல் தெளிவாக அறிகிறோம். கிறிஸ்து இவ்வுலகில் மனிதனுகப் பிறந்ததிலிருந்து உலக சரித்திரம் கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்குப் பின் என்று இரு பிரிவாக பிரிக்கப்பட்டது. பலஸ்தீனுவில் பெத்தலகேம் என்னும் சிற்றூரில் பிறந்த கிறிஸ்துவின் அன்னை மரியாள் ஆவாள். இயேசுவானவரின் வளர்ப்புத் தந்தையாக இறைவன் சூசையைத் தெரிந்துகொண்டார். முப்பது ஆண்டுகளாகச் சாதாரண ஒதுங்கிய வாழ்க்கை நடத்திய கிறிஸ்து பகிரங்க சீவியத்தை, அதிகாரம் பெற்றவராகக் காண்பித்தும் போதித்தும் வந்தார். ''காலம் நிறைவேறியது கடவுளரசு நெருங்கிவிட்டது. மனந்திரும்பி இந் நற்செய்தியை நம்புங்கள்'' மார்க் (1/14) ''அவர் கலிலேயா எங்கும் சுற்றித் திரிந்து அவர்களின் செபக்கூட்டங்களில் போதித்து, விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து மக்களிடையே உள்ள எல்லா நோயையும், பிணியையும் குணமாக்கி வந்தார். (மத்தேயு 4/24)

அவர் போதகத்தின் சாராம்சம் இதுவாகும். தாழ்மையுள்ளோர், தூய உள்ளம் படைத்தோர், இரக்கமுடையோர், நீதியின்பால் பசி தாகமுள்ளோர், சாந்தமுள்ளோர், பேறு பெற்றோர், பிரதான கட்டளையாவது: உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனதோடும் அன்பு காட்டுதலாகும். அதுபோல எம் பகைவருக்கும் மன்னிப்பு அளித்து அன்பு காட்டுதலாகும். இறைவன் தன் தந்தை, இறைவனுல் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட ஏக குமாரனும் அவரே. இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவரின் உணவாக இருந்தது. இவ்வுலகிற்கு இறங்கி வந்தது பணிவிடை பெற அல்ல, பணி புரியவாகும். மனிதனின் மீட்புக்காகத் தன்னுயிரையே தியாகம் செய்யவே வந்தார்.

அவர் சொன்னவை செய்தவை யாவும் யூத மதத் தலைவர்களின் பெருமையையும் அதிகாரத்தையும் பாதித்ததால், அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். ஆயினும் அவர் மூன்றும் நாள் முன்னறிவித்தவாறே மரித்தோரிடமிருந்து உயிர்த்து பன்முறை தம் சீடருக்குத் தம்மைக் காண்பித்து, நாற்பது நாட்பது நாட்களின் பின் அவர்கள் கண்முன் விண்ணகம் சென்றார். அவர் முன் கூறியவாறே உலக முடிவில் அனைவருக்கும் தமது செயல்களுக்கேற்ப பெறுபேற்றை அளிக்கவும், படைப்பெல்லாவற்றையும் புதுப்பித்து பிதாவுக்கு அளிக்கும் படியாகவும் மகிமையோடு மீண்டும் வரவிருக்கின்றார்.

அவர் போதித்த நற்செய்தியின் பணியைத் தொடர்ந்து நடத்தப் பன்னிரு சீடரைத் தெரிந்தெடுத்தார். இராயப்பரை அவர்களின் தலைவராக்கினர். தூய ஆவியின் வரத்தைப் பெற்ற இவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கும், இறப்புக்கும் சாட்சிகளாகத் திகழ்ந்தார்கள். இதனல் ஏராளமானபேர் கிறிஸ்துவை ஏற்றுப் பின்பற்ற முன்வந்தனர். இப்படியாகத் திருச்சபை ஆரம்பித்துப் பரவத் தொடங்கியது.

**செவ்வை பார்த்தல் 1**

கீழ்காணும் பயிற்சியின் மூலம் உங்களின் அறிவை அளப்போம். இப்பயிற்சியில் பங்கெடுங்கள். மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக:

1. இறைவன் இறுதியாகப் பேசியது

   (1) புனித சின்னப்பர் மூலமாக
   (ii) திருமுழுக்கு அருளப்பர் வழியாக
   (iii) இறைமகன் வாயிலாக
   (iv) கபிரியேல் தூதர் வழியாக

2. புது உடன்படிக்கையின் பிரதான அடிப்படை

(1) விசுவாசமாகும் (ii) அன்பாகும்
(iii) வழிபாடாகும் (iv) தாழ்மையாகும்

3. ''நான் வந்தது பணிவிடை பெற அன்று, பணி புரியவே'' என்று கூறியது

(1) மோசெஸ் (ii) மரியாள்
(iii) யேசுநாதர் (iv) எலிசபெத்தம்மாள்

4. கிறிஸ்து மீண்டும் மகிமையோடு வருவது,

(1) முழுப் படைப்பையும் புதுமுகப்படுத்த
(ii) நல்லவர்களைச் சந்திக்க
(iii) எல்லா மக்களையும் ஒன்றுசேர்க்க
(iv) பாவிகட்குத் தண்டனை கொடுக்க

5. அப்போஸ்தலர்களின் தலைவராக நியமிக்கப் பட்டவர்

(1) இராயப்பர் (ii) யோவான் (அருளப்பர்)
(iii) யாகப்பர் (iv) சின்னப்பர் (பாவுலு)

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

செயற்பாடு 1

புனித அருளப்பர் (யோவான்) எழுதிய நற்செய்தியில் 1/1-12 வசனம் வரை வாசித்து உமது சொற்களில் எழுதுக.

கிறிஸ்தவ போதகத்தின் பிரதான படிப்பினைகளில் ஒரு பகுதியை இரண்டாவது பிரிவில் சுருக்கமாகத் தருகிறோம்.

## 4.0 கிறிஸ்தவ போதகத்தின் பிரதான படிப்பினைகள்



மனிதன் நாடும் சுகம் கிறிஸ்துவிலேயே அடங்கியுள்ளது. எல்லா மனிதரும் உண்மையையே தேடிச் செல்கின்றனர். அதை அடையுமட்டும் ஆறுதல் அடைவதில்லை. மனிதன் எதற்காக வாழ்கிறான் எனும் கேள்விக்குப் பதிலைத் தேடியலைகிறான். வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? நன்மையும், தீமையும் இவ்வுலகின்கண் காணப்படுவது ஏன்? துன்பமும் மரணமும் ஏன் அவனை ஆட்கொள்கின்றன? நிலையான இன்பத்தை பெறும் வழியொன்று உண்டா?... இவ்வினாக்கள் உலகம் உண்டான காலந்தொட்டே அவன் மனதில் எழுந்து வந்துள்ளன. இவை உங்கள் கேள்விகளும் தான் என்றால் பிழையில்லையல்லவா.

இப்படியான கேள்விகள் நிறைந்த மனிதனைப் பார்த்து கிறிஸ்து சொல்வது ''சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் நான் உங்களை இளைப்பாற்றுவேன். (மத்தேயு 11/28) ''உண்மையும் உயிரும் நானே'' (அரு. 14/6) ''உலகின் ஒளி நானே என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (அரு 8/12) இதைப் பற்றிக் கிறிஸ்துவின் ஒரு சீடரான சின்னப்பர் இப்படிக் கூறுகிறார். ''கிறிஸ்து எங்கள் ஞானமும், பரிசுத்த தனத்தின் ஊற்றும் மீட்புமாய் இருக்கிறார்'' மேற் கூறியவற்றிலிருந்து மனிதனின் அடிப்படையான கேள்விகட்குப் பதில் கிறிஸ்துவே என்று நாம் காண முடியும். மனிதனின் வாழ்க்கையையொட்டிய எல்லா இரகசியங்களும் கிறிஸ்துவின் ஒளியில் வெளிப்படுத்தப் படுகின்றன. கிறிஸ்தவ ஆசிரியரொருவர் இதைத் தம் மனதில் தெளிவாகப் பதிய வைத்துக்கொள்வராயின் விஞ்ஞான உலகில் வசிக்கும் பிள்ளைகட்கு உரிய வழி காட்டியாகத் திகழ முடியும். கிறிஸ்தவ போதகத்தின் பிரதான படிப்பினைகள் அடங்கியுள்ளது வேதாகமத்திலேயே. ஆகையால் இது சம்பந்தமாகச் சிறு விபரமொன்றை இங்கு தருகிறோம். இறைவெளிப்பாடு அடங்கியுள்ள நூல் வேதாகமம்.

கிறிஸ்துவின் பிறப்புக்கு முன் தரப்பட்ட இறைவாக்கை பழைய ஏற்பாடு என்றழைக்கிறோம். இதில் 46 நூல்கள் (கத்தோலிக்கரல்லாதவர்கள் ஏற்பது 38 நூல்கள்) அடங்கியுள்ளன. கிறிஸ்துவின் வருகைக்குப் பின் தரப்பட்ட இறைவாக்கைப் புதிய உடன்படிக்கை என அழைக்கிறோம். இது 27 நூல்களை அடக்கியுள்ளது. இவை இரண்டையும் சேர்த்து வேதாகமம் என்கிறோம். இறை ஏவுதலால் எழுதப்பட்ட இவ்வாகமங்கள் கிறிஸ்தவ மக்களின் ஆழ்ந்த அன்பையும் மதிப்பையும் எப்பொழுதும் பெற்று வருகின்றன. இவற்றில் அடங்கியுள்ள பல உண்மைகள் மனிதனின் அறிவுக்கு எட்டாதவை. இதனால் இவை தேவ இரகசியங்களென அழைக்கப்படுகின்றன. இவைகளை இறைவன் எமக்களிக்கும் விசுவாசத்தின் ஒளியிலே நாம் காண முடியும்.

**இறைவனையொட்டிய சத்தியங்கள்.**



படைப்பின் ஊற்று உயிருள்ள எல்லாம் வல்ல ஏககடவுளே என்பது கிறிஸ்தவர்கள் அறிந்து ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். அரூபியாக அவர் என்றென்றும் வாழ்கிறார். எங்குமிருக்கிறார். படைப்பனைத்தும் அவரது வல்லமையையும் மகிமையையும் பிரதிபலிக்கின்றது. இறைவனின் அந்தரங்க வாழ்க்கையையும் சுபாவத்தையும் அறிய இயலாது. அது மனித ஞானத்திற்கு அப்பாற்பட்டது. மனிதன் புரிந்து கொள்ளக்கூடிய மொழியினாலும், செயலினாலும் இவ்வுண்மைகளைக் கிறிஸ்து காண்பித்தார். ஏக கடவுளாக இருந்து பிதா, சுதன், தூய ஆவி எனும் ஆள்வகையில் மூவராக இருப்பதாக அறிவித்தார். தம் ஏககுமாரன் வழியாக மனித குலத்

தைத் தம்மிடம் அழைக்க இறைவன் திருவுளங் கொண் டார். பிதாவானவரும் சுதனேடு ஒன்ருக மனிதனைத் தூய்மைப் படுத்தி இறைமகனுக மாற்றித் தம்மிடம் சேர்க்கத் தூய ஆவியான இவ்வுலகிற்கு அனுப்பினுர். இவ்விதமாக திரித்துவத்தின் மூவரும் மீட்டு இரட்சிக் கும் பணியில் பங்கெடுக்கின்றனர்.

**உலகின் படைப்பு**



படைப்பையெல்லாம் ஒழுங்காக்கி அமைத்தவர் தேவனே. அவற்றை உயிரற்ற, உயிருள்ள, அறிவற்ற, அறிவுள்ள பகுத்தறிவற்ற, பகுத்தறிவுள்ள படைப்பு களாகப் படைத்தார். இவற்றில் மனிதனே ஆன்ம சரீரம் கொண்ட பகுத்தறிவுள்ள படைப்பின் சிகர மாக விளங்குகிருன் உலகப் படைப்பின் வரலாற்றை வேதாகமத்தின் முதல் நூலாகிய ஆதியாகமத்தின் ஆரம்ப அத்தியாயங்களிலே காணலாம். பழங்காலத்து மனிதனுக்கு இறைவன் முழு உலகையும் படைத்தார் என்ற உண்மையை அக்காலத்தில் அவர்கள் மத்தியில் வழங்கிவந்த கதைகள் மூலம் வேதாகம ஆசிரியர் காண் பிக்கிருர். மனிதன் உலகம் எப்படி ஆரம்பமானது என்ற விஞ்ஞான ரீதியில் காண்பிக்க எழுதப்பட்டவை யல்ல. மனிதன் சகல படைப்பினதும் சிகரமாக இறை வழிபாட்டில் திகழ்வதால் விஞ்ஞானத்தின் கொள்கை கட்கும், வேதாகமத்தின் கொள்கைகட்கும் முரண்பாடு இருக்க வேண்டியது இல்லை

(இன்றைய மனிதனின் வாழ்க்கை வழியை நாம் விளங் கிக் கொள்ள கீழ்க் காணப்படுபவை உதவியாக இருக்கும்.)

**மனிதனின் உயர்வும் அவன் வீழ்ச்சியும்**

சகல படைப்பினதும் சிகரமாக விளங்கும் மனிதன் முழுப் படைப்பினதும் கர்த்தாவான இறைவனிடம் செல்ல அறிவையும் ஆற்றலையும் கொண்டுள்ளான். இதனுலேயே அவன் படைப்பெல்லாவற்றிலும் முதன் மையானவன் எனப்படுகிருன் இறைவன் அவனுக்க ளித்த இப்புத்தியும், சித்தமும் அவனை மாண்புள்ளவ னுக்குகின்றன. மனிதன் அறிவுடனும், சுதந்திரத்துட னும் தன்னை அன்பு செய்வதையே விரும்புகிருர். ஆயி னும் இந்தக் கொடையை மனிதன் இறைவனுக்கெதி ராகப் பயன்படுத்தினுனென்று வேத வாக்கியம் காண் பிக்கின்றது. சுயநலத்தினுலும் அகங்காரத்தினுலும் ஆதிப்பெற்றேர் சட்டத்தை மீறியதும் தமது விருப் பத்திற்கேற்ப நடந்து இறைவனுக்கு எதிராக வாழத் தொடங்கினர். இச் செயலே ஆதாம் ஏவாளின் பாவ மென்று அழகிய கதை மூலமாக வேதாகமம் எங்க ளுக்குத் தருகின்றது.

முழு மனித சந்ததியும் ஆதிப்பெற்றோரின் பாவத்தினால் தாக்கப்பட்டது. தன் பரிசுத்த தனத்தையும் இறைவனுடன் கொண்டிருந்த தொடர்பையும் இழந்தான். இறைவனிடமிருந்து பிரிந்து துன்பப்பட்டான். இன்று உலகில் காணப்படும் சீரற்ற தன்மை ஆதித் தந்தையரின் பாவத்தின் பலனே. வேதாகமம் தரும் செய்தி இதுவே.

**செவ்வை பார்த்தல் 2**

கீழ்க்காணும் பயிற்சியின் மூலம் நாம் கிரகித்தவற்றைப் பார்ப்போம். பயிற்சியில் பங்கெடுங்கள். மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. கிறிஸ்து எங்கள் ஞானமும், பரிசுத்த தனத்தின் ஊற்றும் மீட்பருமாய் இருக்கிறார். இது எழுதப் பட்டிருப்பது.

   (1) அருளப்பரால் (யோவான்)
   (ii) சின்னப்பரால் (பவுலால்)
   (iii) இராயப்பரால் (பேதுருவால்)
   (iv) லூக்காவால்.

2. பரிசுத்த வேதாகமம் என்பது:

   (1) கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய எல்லா நூல்களும்
   (ii) இஸ்ராயேல் மக்களின் சரித்திரம் எழுதப் பட்ட எல்லா நூல்களும்
   (iii) பழைய, புதிய ஏற்பாடுகள் அடங்கிய நூல்கள் யாவும்
   (iv) மனிதனின் படைப்பை எடுத்துரைக்கும் எல்லா நூல்களும்

3. மனிதனின் மீட்பின் செயலில் சம்பந்தம் கொள்வது,

   (1) பிதாவான இறைவன்
   (ii) சுதனாகிய இறைவன்
   (iii) தூய ஆவியாகிய இறைவன்
   (iv) திரியேக கடவுள்

4. பரி-வேதாகமம் கிறிஸ்தவர்களின் மதிப்புக்குரியதாய் விளங்குவது,

   (1) மனித சரித்திரம் அடங்கியுள்ளதால்
   (ii) கிறிஸ்துவின் முழு வாழ்வையும் விபரிப்பதால்
   (iii) இறை ஏவுதலால் எழுதப்பட்டமையால்
   (iv) அதை எழுதியவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாதலால்

5. உலகின் சகல பிரச்சினைகளும்

(i) பாவத்தின் பிரதிபலன்
(ii) விஞ்ஞான வாதத்தின் பிரதிபலன்
(iii) அறிவின்மையின் பிரதிபலன்
(iv) மனித பிடிவாதத்தின் பிரதிபலன்

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

பாவத்தினுல் மனித குலத்துக்கு ஏற்பட்டது என்ன என்பதை மேலே கண்டோம். அவைகளிலிருந்து மனிதன் மீட்பை எவ்வாறு பெற்றுன்? இன்று எவ்வாறு பெற்றுக்கொள்கிறுன் என்பதைக் கீழ் காணும் பகுதியிலே காண்போம்.

பகுதி III

## 5.0 எம் மீட்பின் வழி

**கிறிஸ்துவின் எம் மீட்பு**

எம் ஆதிப்பெற்றேர் பாவம் செய்தாலும் இறைவன் மனிதன் மீது வைத்த அன்பு அணைந்துவிடவில்லை. மனிதனை மீட்க இறைவன் ஒரு மீட்பரை வாக்குப் பண்ணியதாக வேதாகமம் கூறுகின்றது. இதன்படி இறைவன் மத்தியஸ்தராயிருந்து மனிதனை மீட்பதையும் சகல படைப்பையும் புனிதப்படுத்துவதையும் மனித சரித்திர ஆரம்பத்திலிருந்தே அறியலாம்.

மீட்புச் சரிதையின் மையமும், கர்த்தாவும் கிறிஸ்துவே இறைவன் சித்தப்படியே முழு மனித சரித்திரமும் இவரைச் சூழ்ந்து பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. இவர் மூலமாகச் சகலதும் புதுப்பிக்கப்பட்டு, புத்துயிர் பெற்றுத் திகழ்கின்றன. கிறிஸ்து தன் மரணத்தின் மூலம் மனுக்குலத்தின் ஏக குருவாகவும், முதல்வராகவும், தன் வாழ்வை இறைவனுக்கு உகந்த ஒரு பிரியமான, பூரணமான பலியாக ஒப்புக் கொடுத்தார். ஏகமகன் ஆழ்ந்த அன்பினுல் தம்மை முழுவதும் பிதாவிற்கு ஒப்புக்கொடுத்து ஆதியில் இறைவனிடமிருந்து முறிவுற்ற தொடர்பைத் 'திரும்பவும் முன்போலாக்கினுர்.'' ஏனெனில் ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினுல் அனைவரும் பாவிகளானது போல இன்னும் ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாவார்கள். பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது.
*(உரோ 5/19-20)*

கிறிஸ்து மரித்தோரிடமிருந்து உயிர்த்தார். அவர் சாவை வெற்றி கொண்டார். இந்த வெற்றியை விடப் பெரும் வெற்றி மனித சரித்திரத்திலேயே கிடையாது. ''சாவு வீழ்ந்தது. வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே'' *(1 கொரி 15/54-55)*

சாவின் மீது கொண்ட வெற்றியினுல் இவர் மனித குலத்துக்கு இறைவனிடம் செல்லும் உண்மையான வழியைச் சுட்டிக்காட்டி அவர்களும் தனது புதுவாழ் வின் பங்காளிகளாக முடியுமென்று காண்பித்தார். கிறிஸ்துவின் புதுவாழ்வின் இரகசியம் அவரின் மோட் சாரோகணத்தின் மூலம் நிறைவுபெற்றது.

இம் மீட்பு எம்மத்தியில், எம்முள்ளத்தில் எப்படி நிறை வேறுகின்றதென்பதை இனிக் காண்போம்.

## எமது சொந்த மீட்பு

மனிதன் கிறிஸ்துவில் மீட்பைப் பெற்றுக்கொள்வது தன் விசுவாசத்தின் மூலமாகும். விசுவாசம் என்பது இறைவன்பால் நாம் காண்பிக்கும் நம்பிக்கையாகும் கடவுளின் சித்தத்திற்கேற்ப நடத்தலாகும். விசுவாசம் உள்ளவனிடம் பிதா சுதனிடமிருந்து வருகின்றவரான தூய ஆவி குடி கொண்டிருக்கிறுர். விசுவாசியினுள்ளத் தில் குடிகொள்ளும் தூய ஆவியானவர் அவனுக்கு அருட் சீவியத்தை அளித்து இறை வாழ்க்கையில் பங் கெடுக்கச் செய்து பிதாவுடனும் சுதனுடனும் ஒன் றிக்கச் செய்கிறுர்.

மனிதனில் இறைவன் குடிகொண்டு அவனுள்ளத்தில் ஏற்படும் மாற்றங்களை இஷ்ட வரப்பிரசாதம் அல்லது உதவி அருள் என்று அழைக்கிறேம். சின்னப்பர் கூறு வது போல ஆதியிலிருந்தே மறைந்திருந்த இத்தேவ இரகசியம் தற்போது வெளிப்பட்டுள்ளது. ''அதிர் காலத்தின் மகிமையின் எதிர் பார்ப்பாகிய கிறிஸ்து எம் மத்தியிலே.'' இறைவன் தன்னுள்ளத்தில் வாசம் செய்வதை உணரும் கிறிஸ்தவன் விசுவாசம் நம்பிக்கை, தேவசினேகம் எனும் புண்ணியங்கள் வழியாக இறை வனண்டையில் வருகிறுன். இப்படி அவன் பெற்ற சீவியம் நிறைவு பெறுவது மரணத்தின் பின்னேயே.

## மீட்பின் பிரதான அடையாளமாகிய திருச்சபை

ஞானஸ்நானத்தினுல் பெற்றுக் கொண்ட தூய ஆவி யின் அருட்கொடைகளினுல் கிறிஸ்வவன் திருச்சபை யெனும் இறை மக்களின் கூட்டத்தில் அங்கத்தவனுகி றுன். இச் சபையின் மையம் மனித குலத்தின் மீட்ப ரான கிறிஸ்துவே. கிறிஸ்துவின் விசுவாசம் வைப்ப வனும் கிறிஸ்துவின் திருப்பணியில் பங்கெடுப்பவனும் இவ்வுலகில் கிறிஸ்துவுக்குச் சாட்சியாகத் திகழும் அனை வரினதும் சபையில் பங்காளியாக இருக்கிறுன்.

திருச்சபையை உடலுக்கு ஒப்பிடலாம். இதன் தலை கிறிஸ்துவாக இருப்பது மாத்திரமன்று, தூய ஆவியா னவர் அதன் உயிருமாயிருக்கிறுர். அது வளர்ந்து வரும் உயிருள்ள சரீரம். இதற்கு எப்பொழுதும் கொடுக்கப்படும் மறு பெயர் கிறிஸ்துவினுல் மீட்கப் பட்ட, தூய் ஆவியினுல் பரிசுத்தப்படுத்தப்பட்ட ''இறை மக்கள்'' என்பதாகும். திருச்சபை மனிதரா லான சபையென்றுலும் அது மற்றைய மனித சபை களைப் போலல்லாத இறைத்தொடர்புடைய சபை யாக இருக்கின்றது.


திருச்சபையை ஸ்தாபித்த கிறிஸ்து மனிதனுக மாத்திரமல்ல இறைவனுகவும் இருக்கிருர். இறைவன் தூய ஆவியானவரோடு ஆற்றும் ஆத்மீக அழைத்தல் மூலம் திருச்சபைக்கு அங்கத்தினரை அழைக்கிருர். ஆதலால் திருச்சபையில் துலங்கும் ஒருமைப்பாடும், சீவியமும், பற்பல சேவைகளதும் செயலாளர் இறைவனே, மனிதன் அல்ல.



திருச்சபையின் இவ்வுலகத் தலைவர் பரிசுத்த தந்தை. அவர் பரிசுத்த இராயப்பரின் இடத்தை வகிக்கிருர். இறைமக்கள் ஒரே விசுவாசத்தை ஏற்றுக்கொள்வதற்கும், இறைவனுடன் கொள்ளும் உறவுக்கும் வெளியடையாளமாக இவர் திகழ்கிருர். இவர் உரோமாபுரியில் வதிகிருர். திருச்சபையின் பரிபாலனத்தின் பொறுப்பு அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மனித குலத்தின் பொது நலத்தைப் பேணுமாறும் அவர் உழைக்கிருர். இவ்வுலகில் அவரின் ஆட்சி அரசியல் ஆட்சியன்று. உலகில் பற்பல தேசங்களில் பரவியிருக்கும் திருச்சபை தற்பொழுது அப்போஸ்தலரின் இடத்தை வகிக்கும் ஆயர்களினுல் பரிபாலிக்கப்படுகிறது. அவர்களின் உதவிக்காக துறவிகளும், குருக்களும் உள்ளனர். ஆயர்கள் திருத்தந்தைக்கு அமைந்து நடக்கிறவர்களாவர். திருச்சபையின் ஆட்சியை திருத்தந்தையுடன் அனைத்துலக ஆயர்களும் பகிர்ந்து கொள்கின்றனர். திருத்தந்தை, ஆயர்கள், குருமார், இறைமக்களின் விசுவாசத்திற்குச் சாட்சி பகர்கின்றனர். திருவருட்சாதனங்களால் இறைமக்களுக்கு வரப்பிரசாதங்களைப் பெற்றுத்தந்து அவர்களின் முன் மாதிரிகையாலும் புத்திமதிகளாலும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றனர். இதற்கான அதிகாரத்தை கிறிஸ்துவே அவர்கட்கு அளித்திருக்கிருர். இவ்வதிகாரம் இறைமக்களின் ஆன்மீக விருத்திக்கும், வெளிவாழ்க்கைக்கும் பயனளித்து முன்னேற்றுவதற்காக ஒழிய ஆட்சிபுரியவன்று.

கிறிஸ்து திருச்சபையில் வதிந்து அவரின் மீட்பை எங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் விசேட வழியாகிய திருவருட்சாதனங்களைப் பற்றி இனி அறிவோம்.

### மீட்பைப் பகிர்ந்தளிக்கும் திருவருட் சாதனங்கள்




கிறிஸ்து பெற்றுத்தந்த மீட்பைத் திருச்சபையில் பகிர்ந்தளிக்கவும் மனித சீவியத்தின் பற்பல தேவைகளில் தேவைப்படும் விசேட உதவிகளைக் கொடுப்பதற்காகவும் இவை ஸ்தாபிக்கப்பட்டன. தாய் வயிற்றில் உற்பவித்து இவ்வுலகிற்கு வரும் குழந்தையைத் திருமுழுக்கு மூலமாகக் கிறிஸ்து ஒரு புதுவாழ்வுக்கு உட்படுத்துகிருர். வளர்ந்து வரும் அவனுக்கு உறுதிப்பூசுதற் மூலம் புதுவாழ்வில் பூரணத்துவத்தை அளிக்கிருர். மனிதனின் உடலுக்கு உணவு தேவைப்படுவது போல் ஆ மாவிற்கும் தேவையான உணவைத் திவ்விய சற்பிரசாதத்தின் மூலமாக அளிக்கிருர். மனிதனின் வாழ்வு கஷ்ட துன்பங்கள், நோய் நொடிகளுக்கு உட்படும்போது குணப்படுத்த மருந்து தேவைப்படுவது போல ஆத்துமத்தின் குறைகட்கும் மருந்தாக பச்சாதாபத்தையும்

நோயிற் பூசுதலையும் அளிக்கிறார். பாவத்தால் பலவீனம் அடைந்த ஆன்மாவை பச்சாத்தாபத்தால் குணப்படுத்துவதுடன் நோயில் பூசுதலிலும் கிறிஸ்து நோயாளருடனிருந்து அவர்களைப் பாவத்திலிருந்து சுத்தமாக்கி சாவுக்கு முன் அவன் செய்யும் போருக்கு அவனுக்கு தேவைப்படும் சக்தியையும் தைரியத்தையும் அளிக்கிறார்.

குடும்ப சீவியத்தைப் புனிதப்படுத்த திருவருட்சாதனமாகிய மெய்விவாகத்தையும், சமுதாயத்தின் அங்கத்தினரின் முன்னேற்றத்திற்கும், ஆன்மீக விருத்திக்குமாக குருத்துவத்தையும் எமக்களித்திருக்கிறார். குருத்துவத்தின் மூலம் ஆயர்களுக்கும் குருமாருக்கும் கொடுக்கப்படும் அதிகாரமும், அழைப்பும், இறைமக்களுக்கு வழிகாட்டல், கற்பித்தல் ஆகியனவாகும். இவ்வுலகில் கிறிஸ்துவுக்கு அன்பு செய்யவும் சமுதாய சேவையில் ஈடுபடுவதற்காகத் தங்களை அர்ப்பணிக்கவும் கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் அன்புடனும், நேசத்துடனும் ஒன்றிணைவது மெய்விவாகமென்னும் தேவதிரவிய அனுமானத்தின் மூலமாகும்.

இவ்வாறு பிறப்புத் தொட்டு இறப்பு வரை இறைவனின் அருள் எமக்குக் கிடைத்தே வருகிறது. இறைவன் மனிதனை இவ்வளவு உயரிய நிலையில் படைத்து அவனுக்கு ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் இவ்வளவு அன்பு காண்பிப்பது அவனுடைய இவ்வுலக சீவியத்திற்காக மட்டுமன்று என்று எமக்குத் தெளிவாகின்றது.

## நித்திய சீவியம்



திரு அருட்சாதனத்தின் வழியாக இறைவனின் மக்களாகும் உரிமை பெற்ற கிறிஸ்தவர்கள் மற்றைய திருவருட்சாதனங்களால் அச்சீவியத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறு கிறிஸ்துவில் இறைவனின் சீவியத்தில் பங்கெடுப்பதன் மூலம் கிறிஸ்தவனொருவன் இவ்வுலகிலிருக்கும் போதே தன்னுள் நித்திய வாழ்வை ஆரம்பித்து உருவாக்கிக் கொள்கிறான். அவன் பெற்ற இப்பரிசை, அவன் வளர்த்து வேரூன்றச் செய்வது அவனுடைய கடமையாகும். தன் வாழ்நாளின் இறுதியில் இறைவனையடைந்து அவருடன் வாழும் நிலையை நாம் ''விண்ணகம்'' என்றழைக்கிறோம். இறைவனுடன் வாழும் இவ்வாழ்வு எப்படிப்பட்டதென்பதை மனிதன் முழுதுமறிய முடியாது.
ஏனெனில் மனிதன் இறைவனைப் பொறுத்தமட்டில் கொண்டுள்ளது, நிறைவற்ற முழுமையற்ற குறைவுள்ள அறிவேயாகும். மறு உலக வாழ்வில் இறைவனின் சீவியத்தை இவ்வுலக மனிதன் அறிய இயலாது. ஆதலால் இறைவெளிப்பாடு மூலம் நாம் அறிந்தவற்றை முழுமனதோடு ஏற்பதோடு இறைவனை முகமுகமாகத் தரிசிக்கும் பாக்கியத்தை அடையும் பொருட்டு நித்திய சீவியத்தை அவன் விசுவசிப்பது அவசியம். சின்னப்பர் சொல்வது போல ''ஆண்டவ

ரோடு எப்போதும் இருப்போம்'' (1 தெசலோ 4/17) இது மனிதனின் விசுவாசம், அன்பு, நம்பிக்கை போன்றவற்றை வளர்த்து பலன் தருவதேயாம்.

**செவ்வை பார்த்தல் 3**

கீழ்வரும் வினக்களுக்கு 4 விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. கிறிஸ்து உண்மையான கடவுள் என்று காண்பது

(1) புதுமைகளால்
(ii) அறிவால்
(iii) உயிர்த்தெழுதலால்
(iv) மறுரூபம் அடைந்ததால்

2. கிறிஸ்தவனில் வதியும் தூய ஆவியானவர்

(1) அவனைச் சகல அபாயங்களிலிருந்தும் காக்கிருர்.
(ii) அவனுக்கு அருட்சீவியத்தை அளிக்கிருர்.
(iii) அவனுக்கு உயரிய சமூக வாழ்க்கை நிலையை அளிக்கிருர்.
(iv) அவன் செய்யும் சகல செயல்களையும் ஆசீர்வதிக்கிருர்.

3. திருச்சபையை சரீரத்துக்கு ஒப்பிடலாம். கிறிஸ்து அதன்

(1) சீவியமாக இருக்கிருர்.
(ii) இதயமாக இருக்கிருர்
(iii) ஆத்துமமாக இருக்கிருர்
(iv) சிரசாக (தலை) இருக்கிருர்

4. கிறிஸ்தவனுகிய என் சமுதாய வாழ்க்கையின் விருத்திக்காக இருப்பது,


(1) உறுதிப்பூசுதல், நோயிற் பூசுதல்
(ii) குருத்துவம், மெய்விவாகம்
(iii) ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல்
(iv) குருவும், திவ்விய சற்பிரசாதமும்

5 கிறிஸ்தவன் நித்திய சீவியத்தை பெற்றுக் கொள்வது,

(1) தின்மும் இறைவனை வேண்டுவதால்
(ii) தன் உடமைகள் யாவையும் தியாகம் செய்வதால்
(iii) கிறிஸ்துவினுள் இறைவனின் வாழ்வில் பங்கெடுப்பதால்
(iv) ஞாயிறு கடன் திருநாட்களில் பூசை காண்பதால்

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

## 6.0 கிறிஸ்தவம் தொடர்ந்து வாழ்கிறது.



கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்பவனைக் கிறிஸ்தவன் என்றழைக்கிறோம். உயிர்த்த சீவியராகிய கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவு கொண்டவன் அவன். அவனது பிரதான குணதிசயங்களைக் கீழே காண்போம்.

அவன் இறைவனை வழிபடுகிறவன். அவரின் வார்த்தையையும் விருப்பத்தையும் ஏற்கிறவன். இவ்வாறு கிறிஸ்துவுடன் தொடர்பு வைத்திருப்பது போல் பிதாவானவரினதும் அவன் கொண்டிருக்கும் தொடர்பை விசுவாசம் அல்லது நம்பிக்கை என்றழைக்கிறோம். இதனால் தன் விருப்பத்தைத் தியாகம் செய்யவும் அவரின் சித்தத்திற்கு அமையவும் அவன் முன்வருகிறான். உதாரணமாக: ஆபிரகாமின் விசுவாசம். கிறிஸ்தவன் அனைவரையும் அன்பு செய்பவன். எல்லா நற்குணங்களையும் பிரகாசிக்கும் இறை அன்பையும், அயலானின் அன்பையும் அதாவது முழு மனதோடு இறைவனையும் சாதி, இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லோரையும் அன்பு செய்பவன். இதை நிறைவேற்ற விசுவாசத்தின் கொடையுடன் கிறிஸ்தவனுக்கு அன்பெனும் கொடையும் தேவை. ஏழைகட்கும், புறக்கணிக்கப்பட்டவர்கட்கும் பகைவர்கட்கும் அன்பு செய்ய அவன் முன்வருகிறான்.

அவன் இறைவனின் வாக்குறுதிகள் மட்டில் உறுதியான நம்பிக்கை கொள்கிறான். இவ்வுலகின் தேவைகட்கு இறைவனின் உதவியையும் துன்பதுயரங்களில் கிறிஸ்துவுடன் துன்பங்களைச் சகித்துக்கொள்ளத் தைரியத்தையும் பெற்று நித்திய வாழ்வையும் எதிர்நோக்குகிறான்.

வேதாகமத்தை வாசிப்பதன் மூலமும், கேட்பதன் மூலமும் இறைவனின் சத்தத்திற்குச் செவி மடுக்கிறான். ஆத்தும சீவியத்தை இறைவனின் வார்த்தையெனும் உணவால் போஷிக்கிறான். தியானத்தையும் உள்ளத்தில் செவிப்பதையும், மீட்பின் பிரதான உண்மைகளைத் தியானிப்பதில் தனது உள்ளத்தையும், அறிவையும் இறைவன் பால் எழுப்பி இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான். மரியாள் யாவற்றையும் உள்ளத்தில் வைத்துக் கொண்டது போல அவனும் அவளைப் பின்பற்றுகிறான். பொது வழிபாட்டில் மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து இறைவனுக்கு நன்றியும் புகழும் கூறி இறைவனுடன் அண்மித்து இருக்கிறான்.

திரு அருட்சாதனங்களைப் பெற்றுக் கொண்டு கிறிஸ்துவை அதில் சந்திக்கிறான். கிறிஸ்து உருவாக்கிய திருச்சபையின் செயல்படும் ஒரு அங்கத்தவனாக திகழ்ந்து உலகில் மீட்பின் கருவியாக அமைகிறான்.

தனியாகவும் மற்றவர்களுடனும் ஒன்று சேர்ந்து இறைவனுக்கும் அயலானுக்கும் சேவை செய்கிறான். தான் தெரிந்தெடுத்த வாழ்க்கையை குடும்ப சீவியத்தையோ துறவற சீவியத்தையோ - தழுவித் தன் கடமைகளைச் சரியாக நிறைவேற்றுகிறான். இறைவனுடைய அரசின் மதிப்பீடுகளை உலக வாழ்க்கையில் பின்னிப்பிணைத்து கிறீஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கிச் சந்தோஷத்துடனும் நம்பிக்கையுடனும் பயணம் செய்கிறான். சுருங்கக் கூறின் கிறிஸ்தவ சீவியமென்றால் தன்னுடைய ஆத்துமத்தையும் சரீரத்தையும், மனதையும், மனச்சாட்சியையும், புத்தியையும், அறிவையும் இறைவன் பால் திருப்பி வாழ்வதே உண்மையான கிறிஸ்தவனாய் வாழ மேற்கூறியவற்றை ஒருவன் கடைப்பிடிப்பது அவசியம். இம் மார்க்கத்தை மாணவ மாணவிகளிடையே எடுத்துரையுங்கள்.

## செவ்வை பார்த்தல் 4

மேற்கூறப்பட்ட பகுதியில் நீங்கள் கற்றவற்றைச் சற்று பார்ப்போம். அதற்காகக் கீழ்க்காணும் கருத்துக்களை உங்களால் ஏற்க முடியுமாயின் √ எனவும் முடியாதாயின் X எனவும் அடையாளமிடுக.

1. கிறிஸ்தவ போதனை சத்தியங்களை அடக்கிய ஒரு தொகுப்பன்று; வாழ்க்கை முறையாகும் ☐
2. திருச்சபையின் சகல படிப்பினைகளும் வேதாகமத்தில் அடங்கியுள்ளது ☐
3. ''நம்பிக்கை'' என்பதன் பொருள் இறைவனது வாக்கிற்கு முற்றாகக் கீழ்படிதல் ☐
4. இறையன்பும், பிறரன்பும் ஒரே கட்டளையாகும். ☐
5. கிறிஸ்தவ சீவியத்தின் அடிப்படை விசுவாசமாகும். ☐
6. விசுவாசமும், அன்பும் தன் சொந்த சக்தியினால் ஆக்கிக் கொள்ளும் குணதிசயங்கள் இரண்டாகும். ☐
7. இறைவன் எம்முடன் கதைக்கும் பிரதான வழி பரிசுத்த வேதாகமமாகும் ☐
8. திருவருட்சாதனங்கள் புது முறைகளான படியால் அவ்வளவு முக்கியமற்றவை. ☐
9. ஞானஸ்நானத்தின் வழியாக பொது நிலையினர் குருக்கள், துறவிகள் யாவரும் சமநிலையை வகிக்கின்றனர். ☐
10. கிறிஸ்தவ வாழ்க்கையின் குறிக்கோள் வாழ்வின் இறுதியில் கிறிஸ்துவைச் சந்திப்பது ☐

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

## 7.0 பொழிப்பு

கிறிஸ்தவ போதகம் படைக்கின்றவரான இறைவனுல் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. பழங்காலந் தொட்டு வெவ்வேறு காலங்களில் பற்பல வழிகளால் வெளிப் படுத்தப்பட்ட இச்செய்தி கிறிஸ்துவில் பூரணத்துவம் பெற்றது.

கிறிஸ்துவிடம் ஈர்க்கப்படுதலும் இறைவாக்கில் விசுவாசம் கொள்வதும், அன்பின் வழிவாழ்தலும் கிறிஸ்தவ தர்மத்தின் மூலாம்சங்களாகும்.

ஞானஸ்நானம் வழியாக திருச்சபையில் அங்கத்தினனுகும் கிறிஸ்தவன் பொதுவழிப்பாடு, சமூக சேவை மூலமாகச் செயல்படும் அங்கத்தவனுகத் திகழ்ந்து உலக மீட்பின் செயலில் பங்கெடுக்கிறுன்.

செபத்தினுலும், திருவருட் சாதனங்களாலும் கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து இறையரசின் பூரணத்துவத்தை எதிர்நோக்கிப் பயணம் செய்கிறுன். விண்ணரசில் அது நிறைவேறும்.

## 8.0 பிற்சோதனை

மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. இறைவன் முற்காலத்தில் மனிதனேடு உரையாடியது

   (1) கிறிஸ்து வழியாக
   (ii) அப்போஸ்தலர் வழியாக
   (iii) ஆதிபிதாக்கள் வழியாக
   (iv) குருக்கள் வழியாக

2. கிறீஸ்தவ சீவியத்தின் திருவருட்சாதனம்

   (1) திருமணம்
   (ii) குருத்துவம்
   (iii) நற்கருணை
   (iv) ஞானஸ்நானம்

3. உலக சரித்திரம் இரண்டாகப் பிரிவது,

   (1) கிறிஸ்துவின் மரணத்திலிருந்து
   (ii) கிறிஸ்துவின் உயிர்ப்பிலிருந்து
   (iii) கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து
   (iv) கிறிஸ்துவின் ஆரோகணத்திலிருந்து

4. மனிதன் முழு நிறைவைப் பெற்றுக் கொள்வது,

(1) எல்லா நோய்களிலிருந்தும் நலம் பெறும் போது
(ii) செல்வ சுகங்களை அடையும் போது
(iii) இறைவனின் தரிசிப்பை இறுதியாக அடையும்போது
(iv) திருவருட்சாதனங்களை பெறும் போது

5. திருத்தந்தையின் பிரதான கடமைகள்

(1) திருச்சபையின் ஆன்ம வளர்ச்சிக்கு வழி செய்வது
(ii) முழு மனித குலத்தின் நன்மைக்காக உழைப்பது
(iii புதுமுறை வழிகளால் போதிப்பது
(iv) தம் திருச்சபையின் அதிகாரிகட்கு வழி காட்டுவது.

கீழ்க்காணப்படும் கூற்றுக்களுக்கு பொருத்தமான விடையின் இலக்கத்தை தெரிவு செய்து தரப்பட்டுள்ள கூடுகளுள் எழுதுக.

1. இறைவன் இவ்வுலகத்தின் மீது அதிக அன்பு வைத்ததை எடுத்துக் காட்டுவது:

(1) மனிதனைப் படைத்தது.
(ii) திருச்சபையை உருவாக்கி வைத்தது.
(iii) பற்பல வியாதி வருத்தங்களைக் குணப படுத்தியது.
(iv) தன் ஏகமகனை கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பியது.

2. கிறிஸ்து செய்த பிரதான செயல்:
(1) மரித்தோரை உயிர்த்தெழச் செய்தது.
(ii) பற்பல நோய்களைக் குணமாக்கியது.
(iii) மரணத்தை வெற்றி கண்டது.
(iv) பசாசுகளை விரட்டியது.

3. கிறிஸ்தவ போதனைப்படி மனிதரை மீட்பவர்:
(1) ஒவ்வொரு மனிதனும்
(ii) இராயப்பர்
(iii) காவற் சம்மனசு
(iv) இறைவன்

4 பரிசுத்த வேதாகமம்

(1) பற்பல அறிவை அடக்கிய நூல்
(ii) உலகைப்பற்றி எழுதப்பட்ட நூல்
(iii) இஸ்ராயேலரின் வாழ்க்கை வரலாற்றை அடக்கிய நூல்
(1v) மறை உண்மைகளைப் போதிக்கும் நூல்

5. திருவருட்சாதனங்களில் முதன்மையானது

(1) திருமுழுக்கு
(ii) குருத்துவம்
(iii) திவ்விய நற்கருணை
(iv) திருமணம்

மொடியூலின் இறுதியில் காணப்படும் சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிடுங்கள்.

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை வெற்றிகரமாகக் கற்றுள்ளீர்களா என்பதைச், சோதிப்பதற்கு நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படைகள் உதவும். அத்தகைய ஒப்படைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவ் வொப்படைகளை எழுதித் தொலைக் கல்விப் பிரிவுக்கு அனுப்பி வையுங்கள்.

## 9.0 ஒப்படை

கிறிஸ்தவ தர்மத்தைப் பற்றிக் கீழ்காண்பவற்றை உம்மிடம் கேட்கும் ஒரு கிறிஸ்தவரல்லாதவரோடு உமது உரையாடலைக் கட்டுரையாக வரைக.

(500 சொற்கள்)

* கிறிஸ்துவின் சரீர உத்தானம்
* பகிரங்க சீவியம், மரணம், உயிர்ப்பு
* பரிசுத்த வேதாகமம்
* திருச்சபையின் ஆரம்பமும், அதன் நடைமுறையும்

## 10.0 முக்கிய வாசகங்கள்

உலக ஆரம்பத்தின் விளக்கம்

பின்னர் ஆண்டவர்:- ''நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக. அவன் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், மிருகங்களையும், பூமி முழுவதையும், பூமி மீது அசைவன ஊர்வன யாவற்றையும், ஆளக்கடவான் என்றார். கடவுள் மனிதனைத் தன் சாயலாகப் படைத்தார்; தெய்வீக சாயலாகவே அவனைப்படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்; கடவுள் அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் பல்கிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள். கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும் பூமியின் மீது அசைந்து உலவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்'' என்றார். (ஆதி 1- 26-28)

| | |
|---|---|
| **எதிரிக்கும் அயலானுக்கும் அன்பு செய்வது** | ''அயலானுக்கு அன்பு பகைவனுக்கு வெறுப்பு'' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக செபியுங்கள். அப்போது வானகத்தில் உள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கின்றார். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கின்றார். உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே அன்பு செய்தால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்? உங்கள் சகோதரர்களுக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்? புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா? ஆதலால் உங்கள் வானகத் தந்தை நிறையுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறையுள்ளவராய் இருங்கள், *(மத்: 5:43-48)* |
| **இறைவனே அன்பு: அன்பே இறைவன்** | அன்புக்குரியவர்களே! நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்வோமாக. ஏனெனில் அன்பு கடவுளிடம் இருந்து வருகிறது. அன்பு செய்பவன் எவனும் கடவுளிடம் இருந்து பிறந்துள்ளான். அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை. ஏனெனில் அன்பே கடவுள். *(1 அரு 4: 7-8)* |
| **கிறிஸ்து இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டது இறைவன் மனிதன் மேல் உள்ள அன்பினால்** | தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் அழியாமல் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு தன் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். *(அரு 3:16)* |
| **நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்வோமாயின் கடவுளின் பிள்ளைகள் ஆவோம்** | ''அன்புக்குரியவர்களே, கடவுள் நமக்கு இவ்வாறு அன்பு செய்தார். எனில் நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செய்தல் வேண்டும். கடவுளை எவனும் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால் நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால் கடவுள் நம்முள் நிலைத்திருக்கின்றார். அவரது அன்பு நம்மிடம் நிறைவுற்றிருக்கின்றது. *(1 அரு: 4: 11-12)* |
| **மீட்புப் பெறுவதற்கு இறைவனையும் மனிதனையும் அன்பு செய்ய வேண்டியது அவசியம்** | சட்டவல்லுனன் ஒருவன் எழுந்து அவரைச் சோதிக்க ''போதகரே, முடிவில்லா வாழ்வு பெற நான் செய்ய வேண்டியது என்ன?'' என்று வினவினான். அதற்கு அவர் ''திருச்சட்ட நூலில் என்ன எழுதியுள்ளது? அதில் என்ன வாசிக்கிறீர்?'' என்றார். அவன் மறுமொழியாக ''உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனதோடும் அன்பு செய்வாயாக. உன் மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் நீ அன்பு காட்டுவாயாக'' என்றான். அவரோ ''சரியாய்ப் பதில் சொன்னாய். அப்படியே செய்யும், வாழ்வீர்'' என்றார். லூக் *(10: 25 - 28)* |

**கிறிஸ்து திருச்சபையில் செயலாற்றும் விதம்**

இம்மாபெரும் பணியை நிறைவேற்றத் தம் திருச்சபையிலே எப்பொழுதும் சிறப்பாக இறைபணிச் செயல்களிலே கிறிஸ்து தங்கி இருக்கின்ருர். சிலுவையிலே அன்று தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தவர் அதையே இன்று குருக்களின் பணி வாயிலாக ஒப்புக் கொடுப்பவராக திருப்பலிப் பூசையில் திருப்பணியாளரின் உருவிலும், சிறப்பாக திவ்விய நற்கருணையிலும் வீற்றிருக்கின்ருர். திருவருட்சாதனங்களில் நமது வல்லமையால் எவ்வாறு தங்கி இருக்கின்ருர் என்ருல் ஒருவர் ஞானஸ்நானம் அளிக்கும் போது கிறிஸ்துவே அதை அளிப்பவராகிருர். தமது வார்த்தையிலும் அவர் தங்கி இருக்கின்ருர். ''ஏனெனில் திருச்சபையின் திருமறை நூல் வாசிக்கப்படும் போது அவரே பேசுகின்ருர். இறுதியாக ''இரண்டு மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடி இருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்'' *(மத்: 18 - 20)* என்று உறுதி அளித்த அவரே திருச்சபை மன்ருடும் பொழுதும் சங்கீதங்களைப் பாடும் பொழுதும் திருச்சபையில் இருக்கிருர். *(திருப்பணியின் இயல்பும் திருச்சபையின் வாழ்வில் அதன் முக்கியத்துவமும் 07 எண் சங்க ஏடு 173 ஆம் பக்கம்)*

## 11.0 மேலதிக வாசிப்பு

- இரட்சனிய வரலாறு
- 2 ஆம் சங்க ஏட்டின்

*(1)* கிறிஸ்துவின் திருச்சபை
*(2)* இன்றைய உலகின் திருச்சபை
*(3)* இறை வழிபாடு.

## 12.0 விடைகள்

**முற்சோதனை**

*1.* iv
*2.* ii
*3.* iii
*4.* ii
*5.* iii
*6.* i
*7.* iii
*8.* iii

**செவ்வை பார்த்தல் 1**

1. iii
2. ii
3. iii
4. i
5. iii

**செவ்வை பார்த்தல் 2**

1. ii
2. iii
3. iv
4. iii
5. i

**செவ்வை பார்த்தல் 3**

1. iii
2. ii
3. iv
4. iii
5. iii

**செவ்வை பார்த்தல் 4**

1. ✓
2. ✗
3. ✓
4. ✓
5. ✗
6. ✗
7. ✓
8. ✗
9. ✓
10. ✓

**பிற்சோதனை**

(i)
1. iii
2. iv
3. iii
4. iii
5. i

(ii)
1. iv
2. iii
3. (iv)
4. iv
5. iii

## 13.0 அரும்பத விளக்கம்

| | |
|---|---|
| மறைபொருள் | இது ஒரு பரமரககியம். மனிதர்களின் புத்திக்கு அப்பாற்பட்டது. விளக்கிக் கொள்ள முடியாதது. மறை மெய்மை, அறிவு கடந்த சமய உண்மை, உயர் தெய்வீக உணர்வு. யேசுவின் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள். மறை பொருளானவை. |
| அப்போஸ்தலர் | அனுப்பப்பட்டவர்கள், அபிசேகம் செய்யப்பட்டவர்கள் திருத்தூதர். யேசு தமது கொள்கைகளைப் பரப்புவதற்கு அனுப்பியவர்களில் ஒருவர். ஒரு நாட்டில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பி வெற்றி கண்டவர். செயல் துணையாளர். |
| ஆசியா | முன்பு ரோமராச்சியத்துக்கு சொந்தமானது. தற்போது நாம் அறிந்த சின்ஞசியாவின் தெற்கில் இருந்த பிரதேசம். இன்று அது துருக்கிக்கு சொந்தமானது. அதன் தலைநகரம் எபேசு. ஆசிய பெருங்கண்டம் இதனுல் குறிக்கப்படுவதில்லை. |
| உவமை | உருவக்கதை, காணும் பொருளில் இருந்து கதை பொருளை விளக்குவது. யேசு தன் மதிப்பீடுகளை இப்படியான உருவக் கதைகள் மூலம் வெளிப்படுத்தினுர். படிப்பினைகள், உலக உண்மைகளை விளக்க கையாண்ட கதைகள். |
| உலகில் முடிவில் | ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையின் முடிவும் அவனுக்கு அவன் உலகத்தின் முடிவாகிறது. |
| கிறிஸ்து | இவரைத்தான் மெசியா என்று ஆதியில் இறைவனின் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் சொல்லிக் கொண்டார்கள். பிதாவாகிய சருவேசுரனின் ஏகமகன். எம்மைப் பாவத்தில் இருந்து மீட்கவந்த இரட்சகர். அபிசேகம் செய்யப்பட்டவர், அனுப்பப்பட்டவர் என்றும் பொருள் பெறுவார். |
| உடன்படிக்கை | அன்பின் உறவினுல் ஏற்படும் ஓர் சம்பந்தம். இறைவனுக்கும் மனிதனுக்கும் ஆதியில் இருந்து ஏற்பட்ட உறவு. அன்பினுல் உண்டாகிம் ஓர் பிணைப்பு; தொடர்பு. ஸ்ரேயேல் மக்களுடன் இறைவன் அடிக்கடி உடன் படிக்கை செய்கின்றுர். |
| போதகர் | மறை உண்மைகளை மக்களுக்குக் கூறுபவர். இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் உறவை அமைப்பவர். தன்னலமற்ற இறைபணியாற்றுப்வர் இறைவனுல் தெரிந்தெடுக்கப்பட்டவர். |

**விருத்தசேசனம்** — இது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செய்யப்பட்ட ஒரு சடங்கு. சிறு ஆண் பிள்ளைகளின் ஆண் உறுப்பின் நுனியை வெட்டுவது. இது யூதர்களின் பரம்பரையில் தங்கள் சமயத்தைத் தழுவுவதற்குரியவர் என்று காட்டச்செய்யப்பட்ட சடங்கு. இதனைத் தற்போது இஸ்லாமியர் செய்கிறார்கள்.

**யேசு** — கிறிஸ்துவைப்பற்றிக் கொடுத்துள்ளதைப் பாரும். இரட்சகர்.

**கடவுளின் இறைஅரசு** — இதைப்பற்றி தான் யேசுகிறிஸ்து தன் வாழ்நாள் முழுவதும் சொல்லிக்கொண்டு வந்தார். உலக அரசு அல்ல. இதன் கொள்கைகள், மதிப்பீடுகள் உலகை விட அப்பாற்பட்டன. இது ஓர் இடம் அல்ல. இது இறைமக்களின் உள்ளமும் அதன் நற்கிரியையும். கிறிஸ்து இந்த உலகிற்கு அனுப்பப்பட்டதே இந்த அரசை மக்கள் மத்தியில் கொண்டு வருவதற்காக அவையாவன அன்பு, சமாதானம், நீதி, சந்தோஷம்.

**திருவழிபாடு** — இதுதான் பூசைப்பலி, திருவருட்சாதனங்கள் நிறைவேற்றும் இடம். இறைவனையும் மக்களையும் சந்திக்கச் செய்யும் முறை. இறைவனுக்கும் அவர் மக்களுக்கும் உள்ள உறவின் வெளிப்பாடு. எல்லா இறை வழிபாடுகளிலும் மேலான வழிபாடு.

**வார்த்தை** — சொல், வாக்கு, செய்தி, வார்த்தையானவர் யேசு கிறிஸ்து மாமிசமானார் என்று சொல்லப்படுகிறது. யேசுவே அந்த வார்த்தையும் செய்தியும், இறு ஆதியிலே இருந்தது. இதைப் பற்றி (அருள் 1:1-4) தெளிவாகச் சொல்லப்படுகிறது. இது ''லொக்கோல்'' என்று கிரேக்க மொழியில் அழைக்கப்பட்டது.

**செபக்கூடம்** — தொழுமனை, செப ஆலயம். இங்கு தான் யேசுவின் காலத்தில் இறைவார்த்தைகளை வாசித்து விளக்கம் கூற, செபிக்க ஒன்று கூடுவார்கள்.

**பரிசேயர்** — யேசுவின் காலத்தில், தங்களை நீதிமான்கள் என்று கூறிக்கொண்டு வாழ்ந்தவர்கள். வெளி ஆடம்பரங்களுக்கு, சடங்கு முறைகளுக்கு முதலிடம் கொடுத்தவர்கள். மோயீசனுடைய சட்டத்திட்டங்களை எழுத்துக்கு எழுத்து வாழ்ந்தவர்கள் என்று தங்களைத் தாங்களே சொல்லிக் கொண்டார்கள்.

**மெசியா** — கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லி இருப்பதைப் பாருங்கள்.

**மனுவுருவானது** — இது ஒரு கிறீஸ்துவின் முதல் மறை பொருள்களில் பிரதானமானது. இறைவன் மனிதனுகிறுர். எல்லாம் வல்ல கடவுள், பாவிகளின் தன்மை மாற மனித சுபா வத்தைப் பெறுகிறுர். கடவுள் தன்மையானவர் தன்னை வெறுமையாக்கிப் பாவியின் மனிதத் தன்மையில் பிறக் கிறுர். வரையறையில்லாத இறைவன் வரையறை கொண்ட சரித்திரத்தில் இடம் பெறுகிறுர். அவர் மனி தனுக மரியாளின் வயிற்றில் பிறப்பதனுல்.

**உயிர்த்தெழுதல்** — இறந்த கிறீஸ்து உயிர் பெற்று உத்தானமாகிறுர். சாவில் நின்று வெற்றி பெறுகிறுர். இதனுல் தான் கடவுள் என்பதை நிரூபிக்கின்றுர். ''யேசு உயிர்க்கவில்லை என்றுல் எமது விசுவாசம் வீண்'' என்பது புனித சின் னப்பரின் வாக்கு.

**திருமுழுக்கு** — இதுதான் திருவருட்சாதனங்களில் ஒன்று, எமக்கு உயிர் ஊட்டும் அருட்சாதனம், நம்மைக் கடவுளுடைய திருச்சபையில் சொந்தமாக்கும் சாதனம்.

**ஒப்புரவாகுதல்** — பிரிந்துபோன மனிதனைத் திரும்பவும் இறைவனேடு ஒன்றுக்கும் அருட்சாதனம். இரக்கத்தின் இறைவனும் பாவி மனிதனும் ஒப்புரவாகும் நிலை. இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் அனுபவிக்கச் செய்யும் அருட்சாதனம்.

**ஓய்வுநாள்** — இது யூதர்களின் காலத்தில் மிகவும் பிரதானமான நாள். இறைவனில் ஓய்ந்திருக்கும் நாள். எல்லாவேலை களையும் விட்டு இறைவனைப்பற்றி நினைத்திருக்கும் நாள். இதனை யூதர்கள் எழுத்துக்கு எழுத்து அனுசரித்து வந் தார்கள். இது விவிலியத்தில் பிரதான இடத்தைப் பெறுகின்றது.

**நற்செய்தி** — கெரிக்மா என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட் டது. நல்ல+செய்தி. அந்தச்செய்தி யேசுதான். யேசு வைப்பற்றி யேசு தானே சொல்லுகின்ற செய்தி, அறி விப்பு, அறைகூவல், பட்டுதெறியவைப்பது; பட்டு தெளியவைப்பது.

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி